සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

**Sabaragamuwa Provincial Department of Education**

පළමු වාර පරීක්ෂණය 2018 — 11 ශ්‍රේණිය

1st Term Test 2018 — Grade 11

තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය

**Information and Communication Technology**

**தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்**

පැය එකයි

**One hours**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1-40 வரையிலான வினாக்களுக்கு (1) (2) (3) (4) ஆகிய விடைகளில் மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

---

1) தரவு மற்றும் தகவல் பற்றிய சரியான கூற்று.

A. தகவல் ஒன்றினை பெற தரவு செய்முறைப்படுத்தல் அவசியமாகும்.

B. தகவலின் பெறுமதியானது நேரத்துடன் நிலைக்கிறது.

C. இன்றைய மழைவீழ்ச்சி என்பது தகவலுக்கான ஓர் உதாரணமாகும்.

மேற்கூறியவற்றுள் சரியான கூற்று.

i. A மாத்திரம் ii. A, B மற்றும் C

iii. A மற்றும் B iv. C மாத்திரம்

2) தரவினை உட்செலுத்த விசைப்பலகை பயன்படுத்தப்பட்ட கணினியின் தலைமுறையானது

i. முதலாம் தலைமுறைக் கணினிகள்

ii. இரண்டாம் தலைமுறைக் கணினிகள்

iii. மூன்றாம் தலைமுறைக் கணினிகள்.

iv. நான்காம் தலைமுறைக் கணினிகள்.

3) நாளாந்த வாழ்வில் பயன்படுத்தக்கூடிய முறைமைகளுக்கு உதாரணமாக அமையக்கூடியது.

i. தானியங்கும் காசாள் பொறி (ATM), QR குறிமுறை

ii. காந்தப் பரிவு விம்பமாக்கற் பொறி (MRI) , கணினிப்படுத்திய உடலின் அச்சுப்படை கதிர்பொறி (CAT)

iii. வானொலிச் செய்கை அடையாளமிடுதல் உபகரணம் (RFID), மூடிய சுற்று TV(CCTV)

iv. கணினிப்படுத்திய உடலின் அச்சுப்படை கதிர்பொறி CAT), தானியங்கும் காசாள் பொறி (ATM)

4) பாடசாலை கணினி வலையமைப்புடன் உமது மடிக்கணினியுடன் இணைப்பதற்கு நீர் பயன்படுத்தும் துறை (Port) யாது?

i) PS/2 துறை ii) தொடர்நிலைத் துறை

iii) சமாந்தரத்துறை iv) வலையமைப்புத் துறை

5) பின்வரும் சாதனங்களை கருதுக.

a. இயக்குபிடி(joystick) b. OMR

c. ஒளிப்பேனா d. அச்சுப்பொறி

மேலுள்ளவற்றுள் சுட்டும் சாதனம் மற்றும் வருடி என்பன முறையே

i) a மற்றும் d ii) a மற்றும் c iii) a மற்றும் b iv) c மற்றும்

6) அழிதகு நினைவகத்திற்கு உதாரணமாக அமையக்கூடியது.

I )பதுக்கு நினைவகம் ii) நினைவக அட்டை

iii) தற்போக்கு பெறுவழி நினைவகம RAM iv) நினைவகப் பதிவகம்

7) $123_8$ எனும் எண்ம எண்ணுக்கான சமமான பதின்னறும எண்

(i) $53_{16}$ (ii) $42_{16}$ (iii) $63_{16}$ (iv) $7B_{16}$

8) $27_x$ ‘x’ ஆனது தரப்பட்ட எண்ணின் அடிப் பெறுமானமாகும். இதற்கு பொருத்தமான எண்முறையாக அமையக்கூடியது.

(i) பதின்ம இரும எண்ம (ii) இரும எண்ம பதின்னறும
iii) பதின்ம இரும பதின்னறும (iv) பதின்ம எண்ம பதின்னறும

9) A – 151 B - $10011001_2$ C – $8F_{16}$ D - $230_8$


மேலே குறிப்பிட்ட A,B,C,D, என்பவை ஏறுவரிசைப்படி முறையே

(i) A , B , C , D (ii) B , C , A , D
(iii) C , A , D , B (iv) B , D , A , C


10) ASCII எண்முறையின்படி “H” எனும் எழுத்தானது இரும இலக்கம் $1001000_2$ என்பதனை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. “K” எனும் எழுத்தினை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய இரும இலக்கம் யாது?

(i) $1110101_2$ (ii) $1001101_2$ (iii) $1001011_2$ (iv) $1101010_2$

11) பற்றரி ஒன்றும் இரண்டு ஆளிகளும் பயன்படுத்தி மின்குமிழை எறியச் செய்யும் இரண்டு சுற்றுக்கள் உரு 1 உரு 2 என்பவற்றில் பின்வருமாறு காணப்படுகிறது.








உரு 1





உரு 2

உரு 1 லும் உரு 2லும் காட்டப்படும் தர்க்கப் படலை யாது?

(i)  (ii)  (iii)  (iv) 

12) கீழ் காணப்படும் தர்க்கவாயிலின் வெளியீடானது 1 எனின் A,B,C என்பவற்றின் உள்ளீட்டுப் பெறுமதியானது முறையே




(i) A = 1 B = 1 C = 1
(ii) A = 1 B = 0 C = 1
(iii) A = 0 B = 1 C = 0
(iv) A = 0 B = 1 C = 1

13) P,Q,R என்பன ஒரு வினாப்பத்திரத்தில் காணப்படும் 3 வினாக்கள் ஆகும். விண்ணப்பதாரிகள் 2 வினாக்களுக்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். வினா P ஆனது கட்டாயமானது. விண்ணப்பதாரர்கள் Q மற்றும் R இலிருந்து ஏதாவது ஒரு வினாவினை தெரிவு செய்ய வேண்டும் மேலுள்ள கூற்றுக்கான Boolean கூற்றானது.

i. P AND (Q AND R)
ii. P OR (Q OR R)
iii. P AND (Q OR R)
iv. P OR (Q AND R)

14) பணி செயல்முறைமையில் காணப்படும் பயன்பாட்டு மென்பொருளாக அமையாதது ?

i. வட்டுப் பிரிவிடல் ii. வட்டு வடிவமைத்தல
iii. தொகுப்பி iv வட்டுத் துண்டாக்கல்

15) பணி செயல்முறைமை தொடர்பான பின்வறும் கூற்றுக்களை கருதுக.

a. பாதுகாப்பு முகாமையானது பணிச் செயல்முறைமையொன்றின் பணியாகும்
b. Android பணிச் செயல்முறைமை அப்பிள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டதாகும்.
c. மீக் கணினியில் பல்பயன்பாட்டு பணி செயல்முறைமை பயன்படுத்தப்படுகிறது

மேற்கூறியவற்றுள் சரியானது
i) a, b மாத்திரம் ii) b, c மாத்திரம் iii) a, c மாத்திரம் iv) a,b,c அனைத்தும்

16) CLI என்பது
i. Command Letter Interface ii. Computer Line Interface
iii. Command Line Interface iv. Computer Letter Interface

17) சொல்முறை வழிப்படுத்தி பணம் செலுத்தி பெற்றக்கொண்ட மென்பொருள் மற்றும் திறந்த மென்பொருள் கணினியில் நிறுவி பயன்படுத்துவர். எனினும் கணினியில் நிறுவாமல் பயன்படுத்தும் மென்பொருள் யாது?
i. Open office.writer ii. Word Perfect
iii. Google Docs iv. Ms Word

18) சொல்முறை வழிப்படுத்தல் ஆவணமொன்றில் அச்சிடப்பட்ட சொல் "latter" என்பதனை "letter" ஆக மாற்றீடு செய்ய இலகுவான வழி.
i. Spelling & Grammar ii. Find & Replace
iii. Auto Correct iv. Delete & Retype

19) சொல்முறை வழிப்படுத்தல் ஆவணமொன்றில் "$X^2$" எனும் icon பயன்படுத்தப்படுவது
i. உள் தள்ளுதல் ( Indentation ) செய்யலாம்.
ii. மேலொட்டு இடுதல் (Super Script)
iii. எழுத்தின் அளவை பெருப்பித்தல (Grow Font)
iv. வலது நேர்படுத்தல (Right Alignment)

20) இலத்திரனியல் விரிதாள் ஒன்றில் "####" எனும் அடையாளமானது காட்சிப்படுத்தப்படுவதற்கான காரணமாக அமையக்கூடியது.
i. சூத்திரத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய வழு
ii. நிரலில் போதுமான அளவு இடைவெளி இன்மை
iii. சூத்திரத்தின் நீளம் அதிகமாக காணப்படல.
iv. மேற்கூறிய எவையுமன்று.

21) கீழ்வரும் அட்டவணையானது சேனா வியாபார நிலையத்தின் பொருட்களுக்கான கழிவினை காட்சிப்படுத்துகின்றது."C001" எனும் பொருளின் கழிவானது "D5" கலத்தினுள் உள்ளடக்கப்படல் வேண்டும் எனின் "D5" கலத்திற்கான சூத்திரம் யாது?

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | Sena stors | | | |
| 3 | | Discount = | | | 10% |
| 4 | | Item | Price | Discount | |
| 5 | | C001 | $1,500.00 | | |
| 6 | | C002 | $3,000.00 | | |
| 7 | | C003 | $1,250.00 | | |

i. =C5*E3
ii. =$C$5*E5
iii. =D5*E$3
iv. =C5*E$3

22) பின்வரும் கலமுகவரிகளை கருதுக.
A. E$5$ B. $E$5 C. $5E$ D. E$5

மேலே உள்ள கலமுகவரிகளில் சரியானது
i. B ii. B , C
iii. B ,D iv. எவையுமன்று

23) ருசிறு தனது இலத்திரனியல் நிகழ்த்துகையில் பல்வேறு வகையான எழுத்துக்கள் மற்றும் விவரணங்களை உள்ளடக்கினான் அவன் எழுத்துக்கள் மற்றும் விவரணங்களுக்கு அசைவூட்டங்களை உட்புகுத்த விரும்புகிறானாயின் அவன் அதற்கு கையாளக் கூடிய கருவி யாது?

i. படவில்லை நிலைமாறலல் (Slide transition)
ii. வரைதல் கருவிப்பட்டை (Drawing toolbar)
iii. தனிப்பயன் அசைவூட்டங்கள் (Custom animation)
iv. தளக்கோலம் (Layouts)

24) இலத்திரனியல் நிகழ்த்துகையொன்றில் படவில்லைகளை மீள ஒழுங்கமைப்பதற்கு பயன்படுத்தக்கூடிய கருவி யாது?

i. Normal  ii. Slide Show  iii. Slide sorter  iv. Handout

25) இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளுடன் தொடர்புபட்ட பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்று எது?

i. ஒலியுருக்களை உட்செலுத்த முடியும். ஒளியுருக்களை உட்செலுத்த முடியாது.
ii. ஒளியுருக்களை உட்செலுத்த முடியும் ஒலியுருக்களை உட்செலுத்த முடியாது.
iii. ஒலியுருக்கள் ஒளியுருக்களை உட்செலுத்த முடியாது.
iv. ஒலியுருக்கள் ஒளியுருக்களை உட்செலுத்த முடியும்.

26) நிகழ்த்துகையொன்றில் ஒரு வில்லையிலிருந்து இன்னொரு வில்லைக்கு மாறுவதற்கு வழிமுறையாக அமையக்கூடியது.

i. Slide transition  ii. Slide layout
iii. Slide design  iv. Button

பின்வரும் அட்டவணையினை கருத்திற் கொண்டு 27-29 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.

Patient

| Patient_ID | Patient_Name | DOB | |
|---|---|---|---|
| P100 | Sarath | 1975.12.06 | |
| P101 | Padmini | 1968.06.15 | |
| P102 | Rajapaksha | 1964.02.18 | |

Docter

| Docter_ID | Docter _Name |
|---|---|
| D08 | Dr. Namal |
| D08 | Dr. Ruwan |
| D08 | Dr. Rathnayaka |

27) Doctor அட்டவணைக்கும் Patient அட்டவணைக்கும் இடையிலான தொடர்புடைமை யாது?

i. One-to-one தொடர்புடைமை
ii. Many-to-many தொடர்புடைமை
iii. One-to-many தொடர்புடைமை
iv. Many-to-one தொடர்புடைமை

28) Doctor அட்டவணையில் தரவுகளை தேக்கி வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள புலங்களின் எண்ணிக்கை

i) 3  ii) 4  iii) 2  iv) 6

29) Doctor அட்டவணையில் தரவுகளை தேக்கி வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள பதிவுகளின் எண்ணிக்கை

i) 3  ii) 4  iii) 2  iv) 6

30) ஒரு பணிப்பாளனின் தனித்துவத்தினை அடையாளப்படுத்துவதற்கு தரவுத்தள முகாமைத்துவ தொகுதி (DBMS ) ஒன்றில் பயன்படுத்தக்கூடிய மூலோபாய முறையாக அமைவது

i. Table  ii. Query  iii. foreign  iv. primary key

31) கணினி செய்நிரலாக்கத்தில் சார்புகள் (Function) மற்றும் நடைமுறை (Procedure) தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்றாக அமைவது,

i) செய்நிரல் இலகுவாக அமையும்.
ii) திருத்தத்தினை இலகுவாக மேற்கொள்ள முடியும்
iii) மாற்றங்கள் எதுவும் இன்றி அல்லது சிறியதோர் மாற்றத்துடன் பிறிதொரு இடத்தில் பயன்படுத்த முடியும்
iv) மேற்கூறிய யாவும்.

32) நெறிமுறை (algorithm) ஆனது,

i. கணினி மொழி ஒன்றாகும்.
ii. பணிசெயல் முறைமை ஒன்றாகும்
iii. பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் படிமுறையொன்றாகும்.
iv. கணினிக் குறிமுறை ஒன்றாகும்.

33) பின்வரும் தரவு வகைகளினை கருத்திற் கொள்க

A. Byte B. Integer C. Long D. Single E. Double

6.5 , 15 ஆகியவற்றிற்கான தரவு வகையாக அமைவது

(i) A ,B & C,D,E (ii) A ,D & B,C,E
(iii) D ,E & A,C,B (iv) C ,D,E & A,B

34) தரப்பட்டுள்ள போலிக்குறிமுறையின் வெளியீடாக அமையக்கூடியது

```
BEGIN
        P=5
        R=8
If(P>R)
        Display P
Else
        Display R
END
```

i. 5
ii. 13
iii. 3. 8
iv. error

35) தவறுநீக்கம் என்பது,

(i) அறிவுறுத்தல்களை புதுப்பித்தல்
(ii) கணினிகளைப் பொருத்துதல்
(iii)தவறான அறிவுறுத்தல்களை இனம்காணல்
(iv)அறிவுறுத்தல்களை இயக்குதல்

36) Var : Array[0..5] of integer என்பது ஓரு அணியாகும். "Var : Array[0..5] of integer" என்பதன் அளவு யாது?

i) 5 ii) 6 iii) 4 iv) மேற்கூறிய எவையுமன்று.

37) பின்வரும் while do கட்டமைப்பு தொடர்பான பிழையான கூற்றாக அமைவது

```
Number := 1;

While number <= 10 do

        Number := number + 1;
```

i. மீள்செயல் நடைபெறும் ஒவ்வொரு தடவையும் number இன் பெறுமானத்துடன் 1 கூட்டப்படுகின்றது.
ii. Number மாறியின் தொடக்கப் பெறுமானம் 1 ஆகையினால் நிபந்தனை உண்மையாகும்.
iii. Number மாறியின் பெறுமானம் 10 ஆக இருக்கும் போது மீள்செயல் நிறுத்தப்படுகின்றது.
iv. மீள்செயல் 10 தடவைகள் நடைபெறுகின்றது.

38) முறைமை விருத்தி வாழ்கை வட்டத்தின் படிமுறைகளை ஒழுங்குமுறையில் காட்டும் விடைத்தொகுதி எது?

i. முறைமைத் திட்டமிடல், முறைமைப்பகுப்பாய்வு , முறைமை விருத்தி , சோதனை , நடைமுறைப்படுத்தல் , பராமரித்தல்.
ii. முறைமைப்பகுப்பாய்வு, முறைமைத் திட்டமிடல், மென்பொருள் விருத்தி , சோதனை , நடைமுறைப்படுத்தல் , பராமரித்தல்.
iii. முறைமைத் திட்டமிடல் , விருத்தி செய்தல் , சோதனை , செயல்படுத்துதல் , பராமரித்தல்.
iv. முறைமைப்பகுப்பாய்வு, முறைமைத் திட்டமிடல் , முறைமை விருத்தி , நடைமுறைப்படுத்தல் , பராமரித்தல் , சோதனை

39) முறைமை பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் பிழையானது எது?

i. முறைமையானது உள்ளீடு , வெளியீடு என்பவற்றினைக் கொண்டது.
ii. முறைமையானது ஒரு எல்லையைக் கொண்டது.
iii. முறைமையானது ஒரு இலக்கினைக் கொண்டது.
iv. முறைமையானது எப்பொழுதும் கணினி மயப்படுத்தப்பட்டதாக அமைகின்றது.

40) பரிமாற்றல் செயல்முறை முறைமை (Transaction Processing System) மிகவும் பயனுள்ளதாக அமைவது,

i. பயனருக்கு
ii. கீழ்மட்ட முகாமையாளருக்கு
iii. நடுத்தர முகாமையாளருக்கு
iv. மேல்மட்ட முகாமையாளருக்கு